# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 21, 2026 Weekly E-paper ● February 14, 2026




# கண்டிப்பாக மக்கள் தண்டிப்பார்கள்!

சுப. வீரபாண்டியன்

## பொருளாதார ஆய்வறிக்கை சொல்லும் செய்தி!

வெற்றிச்செல்வன்

## கரணம் தப்பினால்...!

தலையங்கம்

## பூனைக்கு மணி கட்டிய திராவிடமாடல் அரசு!

காசு.நாகராசன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 21, 2026 Weekly E-paper ● February 14, 2026


# கண்டிப்பாக மக்கள் தண்டிப்பார்கள்!

**சுப. வீரபாண்டியன்**

*இந்தியாவின் எதிர்காலம் என்ன ஆகப்போகிறது என்று அஞ்சும் அளவுக்கு, மூன்று புதிய சட்டங்கள் அல்லது ஆணைகளை, ஒன்றிய அரசும் வேறு சில அரசுகளும் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டுள்ளன.*

1. *இந்திய ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களிலும் எல்லா அரசு விழாக்களிலும், இனி "வந்தே மாதரம்" பாடல் பாடப்பட வேண்டும் என்ற ஆணையைக் கொண்டு வர இருக்கிறது!*
2. *2014 ஆம் ஆண்டு மராத்திய அரசினால் வழங்கப்பட்ட, இஸ்லாமியர்களுக்கான 5% உள் இட ஒதுக்கீட்டை ரத்து செய்வதாக, இன்றைய பாஜக அரசின் முதலமைச்சர் பட்நாவிஸ் தெரிவித்திருக்கிறார்!*
3. *பதிவுத் திருமணம் செய்து கொள்ள யாரேனும் இளைஞர்கள் விரும்பினால், உடனடியாக அந்தத் தகவல் பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்று குஜராத் அரசு ஒரு சட்டம் உண்டு வரப் போவதாகத் தெரிவித்திருக்கிறது!*

*-இவை சிறுபான்மை மக்களுக்கு எதிராகவும், காதல் உரிமைக்கு எதிராகவும் தொடுக்கப்படும் அம்புகள் என்பது தெளிவாகப் புரிகிறது!*



*வந்தே மாதரம் பாடல் நாட்டு வாழ்த்துப் பாடல் போல வெளித்தோற்றத்தைக் கொண்டிருந்தாலும், அதன் உள்ளடக்கம் வேறு வகையானது! 19 ஆம் நூற்றாண்டில் வங்காளத்தைச் சேர்ந்த பங்கிம் சந்திரர் எழுதிய ஆனந்த மடம் என்னும் நாவலில் இடம்பெற்றிருக்கும் ஒரு பாடலே இந்த வந்தே மாதரம் ஆகும்! இந்துச் சாமியார்கள் இஸ்லாமியர்களின் பகுதிகளில் தாக்குதல் நடத்தி முடித்த பின்பு ஆடும் களியாட்டத்தில் பாடப்பெறும் பாடலாகவே இது அமைந்திருக்கிறது! அதனால்தான் இந்தப் பாடலை சுபாஷ் சந்திர போஸ், ரவீந்திரநாத் தாகூர் முதலிய பெருமக்களே அன்று எதிர்த்தார்கள்! இன்று மீண்டும் அந்தப் பாடலைப் பாடச் சொல்வதன் மூலம் இஸ்லாமியர்களுக்கு எதிரான ஒரு வெறுப்புணர்வை இந்திய ஒன்றிய அரசு ஏற்படுத்த விரும்புகிறது!*

*இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை ஒழிக்கப் போவதாக மகாராஷ்டிரா அரசு கூறியிருப்பது, சிறுபான்மையினர் மீதான இன்னொரு பெரும் தாக்குதலாகும்! காங்கிரஸ் - தேசியவாதக் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது, அஜித் பவார் துணை முதல்வராக இருந்தபோது அந்த இட ஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டுவரப்பட்டது ! இப்போது அஜித் பவாரும் மரணித்து விட்டார். அந்தச் சட்டமும், இன்று ஆபத்திற்கு உள்ளாகி இருக்கிறது!*

*சிறுபான்மை, பெரும்பான்மை என்கிற வேறுபாடு எதுவும் இல்லாமல், அனைவரது காதல் உரிமையையும் அழிக்க முயற்சி செய்கிறது குஜராத்தின் பாஜக அரசு ! பதிவுத் திருமணங்களுக்குப் பெற்றோரின் ஒப்புதல் வேண்டும் என்று அந்தப் புதிய "குஜராத் அரசு திருமணச் சட்டம் (2025 - 26) " கூறுகின்றது!*

*இந்தியாவை ஒரு பாசிச கட்சி ஆள்கிறது என்பதற்கு இவற்றை விட வேறு என்ன சான்றுகள் வேண்டும்? அந்த பாசிச பாரதிய ஜனதா கட்சியோடுதான் தமிழ்நாட்டில் அதிமுக கூட்டணி அமைத்திருக்கிறது!*


*தங்களின் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி, இந்தக் கட்சிகளை கண்டிப்பாக மக்கள் தண்டிப்பார்கள்!* ●

# பொருளாதார ஆய்வறிக்கை சொல்லும் செய்தி!

வெற்றிச்செல்வன்

தமிழ்நாட்டின் 2025-26ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை மாநிலத் திட்டக் குழுவின் துணைத்தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் 16.02.2026 அன்று முதலமைச்சரிடம் வழங்கினார். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்துள்ள பொருளாதார ஏற்றத்தினைச் சிறப்பாக ஆவணப்படுத்தியுள்ளது இந்த ஆய்வறிக்கை.

பொதுவாக ஒன்றிய அரசு, வரவுசெலவுத் திட்டத்தினை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முந்தைய நாள், இந்தியாவின் பொருளாதார ஆவறிக்கை வெளியிடப்படும். ஆனால் தமிழ்நாட்டில் இவ்வாறு ஆய்வறிக்கை வெளியிடும் வழக்கம் சென்ற ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில்தான் தொடங்கியது. தற்போது இரண்டாவது ஆண்டாக இவ்வறிக்கை வெளிவருகிறது.




மொத்தம் 263 பக்கங்களைக் கொண்ட இந்த ஆய்வறிக்கையில், தொழில்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி,சமூகநலத்திட்டங்களினால் ஏற்பட்ட பயன் ஆகியவற்றோடு, இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றம் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் தேசிய சராசரியைவிட அதிகமாக இருப்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. 2024-25ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 3.62 இலட்சம். அதே வேளையில், இந்தியாவில் தனிநபர் வருமானம் 2.05 இலட்சம் மட்டுமே.

சமூகநலத் திட்டங்களுக்காகத் தமிழக அரசால் ஒதுக்கப்படும் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதையும் இவ்வறிக்கையின்மூலம் அறிய முடிகிறது. 2021-22ஆம் ஆண்டில் சமூகநலத் திட்டங்களுக்காக ரூ. 1,13,265 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில், 2025-26இல் இத்தொகை ரூ.1,57,864 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புதுமைப்பெண், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, நான் முதல்வன், தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட பல்வேறு சமூகநலத் திட்டங்கள் பெண்களின், குறிப்பாக மாணவ சமுதாயத்தினரின் சமூக, பொருளாதாரப் படிநிலைகளில் மாற்றம் கொண்டு வருவதில் பெரும் பங்களிப்பைச் செய்தன. இதற்குக் காரணமாக அமைந்தது அரசின் நிதி ஒதுக்கீடு.

தமிழ்நாட்டில் 15 வயது முதல் 49 வயது வரையுள்ள பெண்களில் கல்வி கற்றவர்கள் 84 விழுக்காடு உள்ளனர். அதே நேரம் இந்தியாவின் விழுக்காடு 71.5% மட்டுமே.

இவை மட்டுமின்றி, இன்னும் சில முக்கியமான விவரங்களையும் ஆய்வறிக்கை நமக்குத் தருகிறது. நேரடி அந்நிய முதலீட்டினை ஈர்ப்பதில் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து தமிழ்நாடு இருந்து வருகிறது. 2022-23-இல் 2,436 மில்லியனாக இருந்த முதலீடு, 2024-25இல் 3,681 மில்லியனாக அதிகரித்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.9 விழுக்காடு. இது இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தில் ஏறத்தாழ இருமடங்காகும். 2024-25க்கான சராசரி விகிதமான 16% தொடர்ந்து நீடித்தால், 2031ஆம் ஆண்டில் தமிழ்நாடு டிரில்லியன் டாலர் வளர்ச்சியை எட்டுவது சாத்தியமாகும் என்கிறது ஆய்வறிக்கை.

இவ்வாறு பல வளர்ச்சிக் கூறுகளைத் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி சாத்தியமாக்கி இருக்கிறது. மேற்காணும் வளர்ச்சிப் போக்குகள் தொடர வேண்டும் எனில், தற்போது இருக்கும் நல்லாட்சியே தொடர வேண்டும். அதற்கான சான்றாக எதிர்வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தல் அமையும் என்றால் அதில் மிகையில்லை.

●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## கரணம் தப்பினால்...!

'கரணம் தப்பினால் மரணம்'என்று சொல்வார்கள். சரி, அது இருக்கட்டும்.

தேர்தல் நெருங்கிவிட்டது. தேர்தல் தேதியை எதிர்பார்த்துக்கொண்டு பரபரப்பாக இருக்கின்றன அரசியல் கட்சிகள்.

தமிழ்நாட்டில் இலைக் கட்சி உள்பட அனைத்துக் கட்சிகளுக்கும் அதனதன் பலம் தெரியும், தெரியாததுபோல இருக்கின்றன. திமுகழகத்தின் மிகப்பெரும் பலம், தலைவர் ஸ்டாலின். காற்றிலும் கடுகி அவர் வேகமாக முன்னோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறார் களத்தில்.

வடநாடெல்லாம் பொய் பேசி, நாடகமாடி ஆட்சியைப் பிடித்து விட்டார்கள். இங்கே தென்னாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் மட்டும் ஆர்எஸ்எஸ் காவிக் கூட்டங்கள் அந்தர்பல்டிகள் அடித்துக் கரணங்கள் போடுகிறார்கள் ஆட்சியைப் பிடிப்போம் என்று. போட்டு என்ன செய்ய...?

தஞ்சாவூர் மைக்கேல்பட்டி பள்ளி மாணவி லாவண்யாவின் தற்கொலை வழக்கில், கட்டாய மதமாற்ற முயற்சி என்று விஸ்வ இந்து பரிசத்தும், அண்ணாமலையும் புரளியைப் பரப்பினார்கள், சிபிஐ அறிக்கை அதை மறுத்துவிட்டது. திருப்பங்குன்றத்திலும் இப்படி ஒரு மதக் கலவரத்திற்காகக் கரணம் போட்டார்கள்? போட்டு என்ன செய்ய?

மாணவர்களின் கல்விக்கு நிதிதர மறுத்தார்கள், நீட் தேர்வை புகுத்தினார்கள், இந்தியை நுழைக்க இன்னமும் முயல்கிறார்கள், நம்முடைய இருமொழிக்கொள்கையைஅழிக்கமுயல்கிறார்கள், இதுபோல எத்தனையோ கரணங்களைப் போடுகிறார்கள் ஒன்றிய காவி ஆட்சியாளர்கள். போட்டு என்ன செய்ய?


மோடியும், அமித்ஷாவும் மாறிமாறி தமிழ்நாடு வருகிறார்கள், போகிறார்கள், கரணமும் போடுகிறார்கள். போட்டு என்ன செய்ய?

இங்கே தந்தை பெரியார் இன்னமும் வாழ்கிறார். பெரியாரின் கைத்தடி ஸ்டாலினிடம் இருக்கிறது.

ஓரிரு மாதங்களில் வருகிறது தேர்தல். பாஜக போடும் கரணங்கள் அங்கேயும் தப்பத்தான் போகிறது!

அதாவது,

'கரணம் தப்பினால் மரணம்' என்பது அரசியலுக்கும் பொருந்தும்!




**தமிழ்நாடு அரசின் சார்பில், என்னைப் பதிப்பாசிரியராகக் கொண்ட "திராவிடக் களஞ்சியம்" நூல்களில் ஒன்று, 18-02-2026 காலை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்படுகின்றது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**- சுப.வீரபாண்டியன்**

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# பூனைக்கு மணி கட்டிய திராவிடமாடல் அரசு!

காசு.நாகராசன்



காங்கிரஸ் கட்சியை சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொதுவெளியில் எழுப்பி வருகிற கருத்துகளும், அதைத் தொடர்ந்து நடைபெறுகிற சமூக ஊடக விவாதங்களும், நமக்குக் கொஞ்சம் கவலையை , கோபத்தைத் தூண்டிய நிலையில்,

கடந்த நான்காண்டுகளாக, ஆளுநர் மூலம் ஒன்றிய அரசு கொடுத்து வருகிற சட்டவிரோத நெருக்கடிகள், நிதிப்பகிர்வில் ஒன்றிய பாஜக அரசின் பாரபட்சமான அணுகுமுறை, மொழித்திணிப்பு, மதவாத வெறுப்பு அரசியல் , மாநிலங்களைச் சிதைக்கும் தொகுதி வரையறை என்று கடுமையான நெருப்பாற்றைக் கடந்து சமரசமற்ற கொள்கை உறுதியோடு தமிழ்நாட்டு அரசை வழிநடத்தி வருகிறார் 'திராவிடமாடல்' முதலமைச்சர் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாடு அரசு அமைத்த வல்லுனர் குழு மாநில - ஒன்றிய அரசுகளின் உறவு குறித்த ஆய்வு அறிக்கையை மாண்புமிகு நம் முதலமைச்சரிடம் பிப்ரவரி 16 ஆம் நாள் வழங்கியிருக்கிறது. அந்த அறிக்கையின் விவரங்களையும் தேவையையும் 18.02.2026 அன்று சட்டமன்றத்தில் உரையாக ஆற்றி, அறிக்கையை அவையிலே வழங்கி இருக்கிறார் அவர்.

மாநில சுயாட்சி என்கிற முழக்கத்தை இந்திய ஒன்றியத்திலேயே முதன் முதலாக எழுப்பியது திமுக தான். 1952 ஆம் ஆண்டு சுதந்திர இந்தியாவில் நடைபெற்ற முதல் தேர்தலில் பங்கேற்காத நிலையிலும், திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்து அதை ஆதரிக்கிறவர்களுக்கு திமுகழகம் தேர்தலில் ஆதரவு தரும் எனச் சொல்லி, 44 சட்டமன்ற உறுப்பினர்களின் வெற்றியை திராவிடநாடு கோரிக்கையின் வாயிலாக உறுதிப்படுத்தியது திமுக.

தொடர்ந்து, 1962 பிரிவினைத் தடைச்சட்டத்தின் காரணமாக திமுகழகத்தின் திராவிடநாடு கோரிக்கையை வடிவம் மாற்றி, 1963 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்திலேயே மாநில சுயாட்சி குறித்த முழக்கத்தை எழுப்பினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

1967 ஆம் ஆண்டு திமுகழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் மாநில சுயாட்சி வலியுறுத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு நீதியரசர் ராஜமன்னார் தலைமையில் ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகள், அதிகாரங்கள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை வழங்குவதற்கான வல்லுநர் குழுவை அமைத்தார்.

அத்தோடு "மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி" என்கிற முழக்கத்தையும், அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்கிற உணர்ச்சியோடு வடித்துக் கொடுத்தார் தலைவர் கலைஞர்.

1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சிக்கான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றினார் கலைஞர் அவர்கள்.

தொடர்ந்து, 2021 ஆம் ஆண்டு திமுகழகத்தை தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்தியபோது இந்த ஆட்சிக்கு ' திராவிடமாடல் ஆட்சி' என்று பெயர் சூட்டி, இந்த ஆட்சியின் நோக்கத்தையும் , திசை வழியையும் அடையாளம் காட்டினார் அவர்.

ஒன்றிய பாஜக அரசால் மறுக்கப்பட்ட மாநில உரிமைகளை , சட்டப் போராட்டத்தின் மூலம் பாதுகாத்து, தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கிற முதலமைச்சர், மாநில - ஒன்றிய அரசுகளின் இன்றைய காலகட்ட சூழலுக்கு ஏற்ற உறவு நிலை, அதிகாரப்பரவல் , பறிக்கப்பட்ட உரிமைகள் ஆகியவை குறித்து ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் அவர்களுடைய தலைமையில், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அசோக் வர்தன் ஷெட்டி, தமிழ்நாடு அரசின் மேனாள் திட்டக்குழு உறுப்பினர் முனைவர் நாகநாதன் ஆகியோரைக் கொண்ட குழுவை அமைத்தார்.

அந்தக் குழுவின் அறிக்கையை 18- 2- 2026 அன்று சட்டமன்றத்தில் முன்வைத்து அந்த அறிக்கையின் மீதான முன்னுரையையும் தமிழ்நாடு முதலமைச்சர் ஆற்றி இருக்கிறார்.

வரலாற்றில் அரசியல் சமூக தளத்தில் ஆற்றப்பட்ட பல்வேறு உரைகள் தலைசிறந்த உரைகளாக பேசப்படுகின்றன. தமிழ்நாட்டு அரசியலில், திராவிட இயக்க வரலாற்றில் டாக்டர் டி எம் நாயர் அவர்களின் ஸ்ப்பர்டாங் சாலை உரையும், தந்தை பெரியார் அவர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்ட கடற்கரை உரையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் ராபின்சன் பூங்கா உரையும், தலைவர் கலைஞர் அவர்களின் மதுரை ஜான்சி ராணி பூங்கா உரையும் திராவிட இயக்க வரலாற்றில் சிறப்பான உரைகள். அந்த உரைகளுக்கு நிகராக, வரலாறு கொண்டாடக்கூடிய ஓர் உரையை தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று ஆற்றியிருக்கிறார் .

நடைபெறுகிற 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் என்பது மாநில உரிமைகளை மீட்பதற்கான போராட்டக் களம் என்பதாக நாம் எடுத்துக் கொண்டு, ஸ்டாலின் தொடரட்டும்...

தமிழ்நாடு வெல்லட்டும் ! என்கிற நோக்கத்தோடு செயல்படுவோம்! வெல்வோம் ஒன்றாக!!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian